# இணையவழிப் பாதுகாப்புச் சட்டம் இன்று தொடக்கம் நடைமுறை
# சபாநாயகர் மஹிந்த யாப்பா சான்றுப் பத்திரத்தில் கையொப்பம்

## மேலுமிரு புதிய சட்டங்களும் அமுலாகின்றன



இணையவழிப் பாதுகாப்புச் சட்டம் இன்று தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன சான்றுப் பத்திரத்தில் கையொப்பமிட்டுள்ளார்.

கடந்த 24 ஆம் திகதி பல்வேறு குழப்பங்களுக்கு மத்தியில் இணையவழிப் பாதுகாப்புச் சட்டம் நாடாளுமன்றத்தில் பொரும்பானமை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

உயர்நீதிமன்றத்தினால் குறிப்பிடப்பட்ட 34 திருத்தங்களை மேற்கொள்ளுமாறு எதிர்க்கட்சிகள் வலியுறுத்திய நிலையில் சான்றுப் பத்திரத்தில் கையொப்பம் இடும் நடவடிக்கை சபாநாயகரால் பிற்போடப்பட்டிருந்தது.

ஆயினும், இணையவழி பாதுகாப்பு சட்டம் இன்று சபாநாயகரால் சான்றுப்படுத்தப்பட்டுள்ள நிலையில் இன்று தொடக்கம் அமுலுக்கு வரும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதற்கமைய இந்தச் சட்டமூலம் 2024 ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க நிகழ்நிலைக் காப்புச் சட்டமாக நடைமுறைக்கு வருகிறது.

அத்துடன், நாடாளுமன்றத்தில் விவாதித்து திருத்தங்களுடன் கடந்த ஜனவரி மாதம் 9ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட தேசிய நீரளவைச் சட்டமூலம் மற்றும் ஜனவரி மாதம் 10 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட நீதிமன்றம், நியாயசபை அல்லது நிறுவனமொன்றை அவமதித்தல் சட்டமூலம் ஆகியவற்றிலும் சபாநாயகர் தனது கையொப்பத்தையிட்டு சான்றுரைப்படுத்தியுள்ளார்.

இதற்கமைய இந்தச் சட்டமூலங்கள் 2024ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க தேசிய நீரளவைச் சட்டம் மற்றும் 2024ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க நீதிமன்றம், நியாய சபை அல்லது நிறுவனமொன்றை அவமதித்தல் சட்டமாக நடைமுறைக்கு வருகின்றன. (04)


மாலைக்கதிர்
Maalaikkathir








சாயல் - 01 வள்ளுவர் ஆண்டு 2054 தை 18 வியாழக்கிழமை 01.02.2024 கதிர் 170


# இலங்கையின் இணையவழிப் பாதுகாப்புச் சட்டம் எதிர்மறையான சமிக்ஞையை ஏற்படுத்தியுள்ளது

## அமெரிக்க தூதுவர் ஜூலிசங் சுட்டிக்காட்டு!



இணையவழிப் பாதுகாப்புச் சட்டம் பொருளாதார மீட்சியை நோக்கிப் பயணிக்கும் இலங்கைக்கு எதிர்மறையான சமிக்ஞையை ஏற்படுத்தியுள்ளதாக இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலிசங் சுட்டிக்காட்டியுள்ளார்.

அமெரிக்க வர்த்தக சம்மேளனத்தின் நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இதனைச் சுட்டிக்காட்டியிருந்தார்.

இணையவழிப்பாதுகாப்பு உத்தேசச்சட்டம்இணையவழிக் குற்றங்களை ஒடுக்குவதற்கு உருவாக்கப்பட்டாலும் அது நாட்டின் ஜனநாயகத்தை

2➤

# யாழில் பொலிசாரால் தாக்கப்பட்ட நபர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்

யாழ்ப்பாணத்தில் பொலிஸ் உத்தியோகத்தர்களின் தாக்குதலில் படுகாயமடைந்த இளைஞரொருவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் கடமைபுரியும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவரே தாக்குதலில் ஈடுபட்டதாகவும் கூறப்படுகிறது.

அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் அளிக்கப்பட்ட முறைப்பாடு தொடர்பில் விசாரணைக்கு செல்லாதமையால் பொலிஸார் வீதியில் தன்னை கடுமையாக தாக்கியதாக பாதிக்கப்பட்டவர் வைத்தியசாலை பொலிஸாருக்கு முறைப்பாடளித்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (01)

# கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார் ஜனாதிபதி மக்களின் அவசிய தேவைகளுக்கு முன்னுரிமை

## அமைச்சர் டக்ளஸ் அறிவுறுத்து!



கிடைக்கின்ற சந்தர்ப்பங்களை எமது மக்களுக்கானதாகப் பயன்படுத்துவதே எனது வழமை. அதற்கிணங்க

சுமார் மூன்று வருடங்களுக்கு பின்னர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்களினால் பன்முகப்படுத்தப்பட்ட நிதியின் ஊடாக எமது மாவட்டத்திற்கும் கூடுதலான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் அதனை உச்ச பட்சமாக மக்களின் அவசிய

2➤

# கெஹலியவுக்கு வெளிநாடு செல்லத் தடை சி.ஐ.டியில் ஆஜராகுமாறும் அதிரடி உத்தரவு



முன்னாள் சுகாதார அமைச்சரும் தற்போதைய சுற்றாடல் துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல வெளிநாடு செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

மாளிகாகந்தை நீதிவான் நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

அத்துடன், கெஹலிய ரம்புக்வெலவை நாளை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகுமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ)

# மக்களை மௌனமாக்கி கருத்தை ஒடுக்கவே இணையவழிப் பாதுகாப்புச் சட்டம் வருகிறது!

## *மார்ச் 12 இயக்கம் சுட்டிக்காட்டியது*

மக்களை மௌனமாக்குவதற்காகவும் மக்களின் கருத்துக்களை ஒடுக்குவதற்காகவுமே இணையவழிப் பாதுகாப்புச் சட்டத்தை அரசாங்கம் நிறைவேற்றியுள்ளதாக மார்ச் 12 இயக்கம் தெரிவித்துள்ளது.

இணையவழிப் பாதுகாப்புச் சட்டம் மூலம் அடிப்படை உரிமைகளுக்கு மிகவும் ஆபத்தானது என்பதையும் இலங்கையின் அரசியலமைப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள ஜனநாயக கொள்கைகளிற்கு ஆபத்தானது என்பதையும் நாங்கள் மீண்டும் வலியுறுத்த விரும்புகின்றோம் என்றும் அந்த இயக்கம் தெரிவித்துள்ளது.

மேலும் தற்போதைய அரசாங்கம் இந்த சட்டமூலத்தை தொடர்ந்தும் முன்னெடுப்பதில் காண்பிக்கும் முயற்சியானது, மிக முக்கியமான பொருளாதார சீர்திருத்த மற்றும் எதிர்வரும்

2➤

# பன்றிகளுடன் கூட்டணி அமைக்கத் தயாரில்லை!

## நாங்கள் சிங்கங்கள் - என்று விமல் கர்ஜனை



“சிங்கங்கள், பன்றிகளின் பண்ணைக்குள் செல்லாது. எனவே, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் அமையும் புதிய கூட்டணியில் நாம் இணையமாட்டோம்.” - என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச எம்.பி. தெரிவித்தார்.

முன்னாள் இராணுவத் தளபதி தயா ரத்நாயக்க ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்தமை குறித்தும், மைத்திரி-பால சிறிசேன தரப்பால் உருவாக்கப்பட்டு வரும் புதிய கூட்டணி குறித்தும் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

2➤


- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# கண்டாவளையில் சட்டவிரோத மணல் அகழ்வு இடத்தைப் பார்வையிட்ட பிரதேச செயலாளர்

கண்டாவளையில் பரந்தன் முல்லைத்தீவு பிர தான வீதியை அண்மித்து சட்டவிரோத மணலகழ்வு தொடர்பில் கண்டாவளை பிரதேச செயலாளர் சம்பவ இடத்தை பார்வையிட்டார்.

குறித்த பகுதியில் மணல் மாபியாக்களால் கனரக வாகனம் கொண்டு அச்சம் இல்லாது சட்ட விரோத மணல் அகழ்வில் ஈடுபடுகின்றமை தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டிருந்தது.

குறித்த விடயம் தொடர்பில் 3 பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளை அழைத்து அமைச்சர் விசேட கலந்துரையாடலை மேற்கொண்டிருந்தார்.

இந்த நிலையில், குறித்த பகுதிக்கு நேற்று (31) பிற்பகல் சென்ற கண்டாவளை பிரதேச செயலாளர் கள நிலைமைகளை கண்காணித்ததுடன், சம்பவம் தொடர்பில் கட்டுப்படுத்தும் நடவடிக்கையை கிராம சேவையாளர் மற்றும் கிராம மட்ட அமைப்புக்களின் ஒத்துழைப்புடன் பொலிசாருடன் இணைந்து மேற்கொள்ள உள்ளதாக தெரிவித்தார். சட்ட விரோத மணல் அகழ்வுக்கு 10 நாட்களுக்குள் நிரந்தர தீர்வை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பெற்று தருவதாக கூறியுள்ள நிலையில், தற்பொழுது இந்த பகுதியில் மேற்கொள்ளப்படும் சட்ட விரோத மணல் அகழ்வை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

குறித்த பகுதி இரணைமடு குளத்தின் கழிவுநீர் வாய்க்கால் மற்றும் பரந்தன் முல்லைத்தீவு பிரதான வீதியை மிக அண்மித்து காணப்படுவதால், எதிர் காலத்தில் மிகப் பெரிய அனர்த்தங்களையும், பாதிப்புக் களையும் ஏற்படுத்தும் அபாய நிலை ஏற்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது. (02)

# வயது முதிர்வைக் கட்டுப்படுத்தும் மருந்து கொழும்புப் பல்கலை ஆய்வில் கண்டுபிடிப்பு

வயது முதிர்வை எதிர்க்கும் ஊட்டச்சத்து மருந்தினை கொழும்பு பல்கலைக்கழகம் கண்டுபிடித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த மருந்து இயற்கையான பொருட்களை கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு பல்லைக்கழகத்தின் உயிரியல் இரசாயனம், மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரியல் தொழிநுட்ப நிறுவனத்தின் விஞ்ஞானி பேராசிரியர் சமீர ஆர் சமரகோன் தெரிவித்துள்ளார்.

நீண்டகால ஆராய்ச்சிக்குப் பிறகு, மருந்துத் தயாரிப்பு இறுதி கட்டத்தில் இருப்பதாகவும் பேராசிரியர் தெரிவித்துள்ளார். மேலும், இந்த மருந்து ஒரு பாரம்பரிய முறைப்படி தயாரிக்கப்பட்டுள்ளமையினால் ஆயுர்வேத திணைக்களத்திடம் அனுமதி பெறப்பட வேண்டும் என்றும் பேராசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

# யாழ் போதனாவின் மருத்துவக் கழிவு எரியூட்டி மார்ச் முதல் செயற்படுமாம்!

யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலை மருத்துவக் கழிவுகளை எரியூட்டுவதற்கான புதிய எரியூட்டி எதிர்வரும் மார்ச் மாதம் முதல் செயற்பட ஆரம்பமாகும் என யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த. சத்திய மூர்த்தி தெரிவித்துள்ளார்.

வைத்தியசாலையின் மருத்துவக் கழிவுகளை எரியூட்ட கோம்பயன் மணல் மயானத்தில், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி செயற்திட்டத்தின் 40 மில்லியன் ரூபா நிதிப் பங்களிப்பில் எரியூட்டி நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. அதன் பணிகள் பூர்த்தியாகும் நிலையை அடைந்துள்ளது.

எதிர்வரும் வரும் மார்ச் மாதம் முதல் இந்த எரியூட்டி தொழிற்படத் தொடங்கும் என பணிப்பாளர் தெரிவித்தார்.

# மல்வான அல்-முபாரக் தேசியக் கல்லூரி பழைய மாணவர் சங்க ஒன்றுகூடல்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

மல்வான அல்-முபாரக் தேசியக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த ஒன்றுகூடல் கல்லூரி அதிபர் எஸ்.எச்.எம்.நஹீம் தலைமையில் நடைபெற்றது.

எதிர்வரும் இரண்டு ஆண்டுகளுக்கான பழைய மாணவர் சங்க நிறைவேற்றுக்குழு தெரிவு உறுதிப்படுத்தப்பட்டதுடன், எதிர்காலத்தில் முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டிய அபிவிருத்தி திட்டங்கள் பற்றியும் இதன்போது கலந்தாலோசிக்கப்பட்டது.






# உணவு விஷமாகியதால் 400 மாணவர்கள் பாதிப்பு

பிங்கிரியவில் அமைந்துள்ள வடமேல் (வயம்ப) தேசிய கல்வி பீடத்தின் 400 ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் திடீர் சுகவீனம் காரணமாக நேற்று (31) பிங்கிரி மாவட்ட வைத்தியசாலையில அனுமதிக் கப்பட்டனர்.

இந்த மாணவர்கள் அனைவரும் அதிக வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கினால் பாதிக்கப்பட்டு சுமார் 25 பேர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும், இன்னும் பலர் வைத்தியசாலையிலில் சிகிச்சை பெற்று வெளியேறியுள்ளனர்.

மாணவர்கள் 6 குழுக்களாகப் பிரிந்து நேற்று முன்தினம் (30) காலை முதல் நாள் முழுவதும் ஆய்வு சுற்றுலாவில் ஈடுபட்டு வந்த நிலையில், அங்கு அவர்கள் உட்கொண்ட உணவு விஷமாகி இவ்வாறு நோய்வாய்ப்பட்டிருக்கலாம் என மருத்துவர்கள் சந்தேகிக்கின்றனர். (ரெப-02)

## மக்களை மௌனமாக்கி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல் காலங்களில் கருத்து வேறுபாடுகளை கொண்டவர்களை மௌனமாக்கும், சிவில் செயற்பாடுகளை ஒடுக்கும் அரசாங்கத்தின் நோக்கங்கள் தெளிவாக வெளிப்படுத்தி நிற்கின்றது.

இதேவேளை அதிகரித்துவரும் வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க முடியாத மக்கள் மௌனமாக துயரத்தை அனுபவிக்கும் அதேவேளை, ஆட்சியாளர்கள் இந்த மௌனம் கீழ்ப்படிதல் எனக் கருதக்கூடாது என்றும் அந்த இயக்கம் குறிப்பிட்டுள்ளது.

## பன்றிகளுடன் கூட்டணி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“மைத்திரிபால சிறிசேன அரசியல் ரீதியில் பொய்யர். அவருடன் கூட்டு அரசியல் பயணத்துக்குத் தயாரில்லை. பன்றிகள்தான் பன்றிகளின் பண்ணைக்குள் செல்லும், மாடுகள் மாட்டுத் தொழுவங்களுக்குள் செல்லும். நாம் சிங்கங்கள். இழுநிலைக்கு விழமாட்டோம். சில வேளை எமது பக்கம் உள்ள சில பன்றிகள் அவற்றின் பண்ணை நோக்கிச் செல்லக்கூடும்.

அதேவேளை, எட்கா மட்டுமல்ல எம்.சி.சி. உடன்படிக்கையைக் கைச்சாத்திடுவதற்கான பேச்சுகளும் இடம்பெறுகின்றன. இவை தொடர்பில் நாட்டில் உள்ள முற்போக்கு சக்திகள் குரல் எழுப்பாமை கவலையளிக்கின்றது.” - என்றார். (அ)

## கூடுதல் நிதி ஒதுக்கீடு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேவைகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் பயன் படைத்துவதையே நான் விரும்புகின்றேன், என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்

அத்துடன் அதனை உறுதிப்படுத்த வேண்டிய கடமை அதிகாரிகள் முதற்கொண்டு பொதுமக்களிடமும் இருக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

வேலணை பிரதேச செயலகத்தில் இன்றைய தினம் இடம்பெற்ற பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தை ஆரம்பித்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார். (01)

## இலங்கையின் இணையவழிப் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒடுக்குவதாகவே அமைந்துள்ளதாக சர்வதேச தொழில்நுட்ப நிறுவனங்கள் குறிப்பிடுவதாகவும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் வர்த்தகத்தில் ஈடுபடுவதற்கான சூழ்நிலையை முன்னேற்றகரமானதாக்குவதற்கு இலங்கை அரசாங்கம் சீர்திருத்தங்களை முன்னெடுக்கும் அதேவேளை இந்தச் சீர்திருத்தங்கள் குறித்து மக்களுக்குத் தெளிவாக அறிவிக்கவேண்டும் என்றும் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை அரசாங்கம் சீர்திருத்தங்களை முன்னெடுப்பது மிகவும் அவசியமானது எனத் தெரிவித்த அவர், சட்டமூலங்களை தாமதமாக அமுல்படுத்தவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

இணையவழிப் பாதுகாப்புச் சட்டமூலம் தொடர்பான விளங்கங்களை சட்டம் நிறைவேற்றுவதற்கு முன்னர் 70 சதவீதமான மக்கள் அறிந்திருக்கவில்லை என்றும் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலிசங் மேலும் குறிப்பிட்டுள்ளார். (04)

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# யாழ் பல்கலை மாணவர்களின் வாகனங்கள் சுத்திகரிப்பு நிகழ்வும் உணவுத்திருவிழாவும்





யாழ்ப்பாணம், பெப். 01

யாழ்ப்பாண பல்கலைக்கழக முகாமைத்துவ மற்றும் வணிக பீட மாணவர் ஒன்றியத்தினால் 2024 ஆம் ஆண்டு தை மாதம் 31ஆம் திகதி யாழ் பல்கலைக்கழக பிரதான வாயில் வளாகத்தில் நிதி சேகரிப்பதற்காக வாகன சுத்திகரிப்பு நிகழ்வும் உணவு திருவிழாவும் ஏற்பாடு செய்யப்பட்டன.

இந்த நிகழ்வானது MACOS 2024 நிகழ்வின் ஒரு பகுதியாகும். வருடம் தோறும் MACOS நிகழ்வானது மாணவர்களின் கலைத்திறமைகளையும் விளையாட்டுத்திறமைகளையும் வெளிக்கொண்டு வரும் முகமாக மாணவர்களினால் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில் இந்த வருடமும் ஆரம்ப நிகழ்வாக இந்த வாகன சுத்திகரிப்பு நிகழ்வும் உணவுத்திருவிழாவும் நடைபெற்று முடிந்தன. முகாமைத்துவ மற்றும் வணிக பீட மாணவர்களினால் இந்த வாகன சுத்திகரிப்பு நிகழ்வு மூன்றாவது முறையாகவும் உணவுத் திருவிழா முதல் முறையாகவும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர்.சிவக்கொழுந்து ஸ்ரீசற்குணராஜாவும், முகாமைத்துவ மற்றும் வணிக பீடத்தின் பீடாதிபதி மற்றும் பல விரிவுரையாளர்களும் கலந்து சிறப்பித்தனர்.

இந்த நிகழ்வில் சேகரிக்கப்பட்ட நிதியானது இயலாதவர்களுக்கு நன்கொடையளிப்பதற்கும் மற்றும் யாழ்ப்பாண பல்கலைக்கழக சமுதாய சமையலறைக்கு நன்கொடையளிப்பதற்கும் பயன்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர்களிடையே ஒற்றுமையையும் சமூகப் பொறுப்பையும் கட்டியெழுப்புவதற்கு சிறந்த சந்தர்ப்பமாக இருந்த இந்த நிகழ்வின்போது, சமூக நலன் கருதி நிதிப்பங்களிப்பை வழங்கியவர்களுக்கு மாணவர்களால் மரக்கன்றுகளும் வழங்கப்பட்டன.

# அம்பாறையில் EHSAS வேலைத்திட்டம் செயற்பாட்டாளருக்கு கௌரவிப்பு



(நூருல் ஹுதா உமர்)

ஸ்ரீலங்கா இஸ்லாமிக் ரிலீப் நிறுவனம் நிறுவனமானது, அம்பாறை மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட பிரதேச செயலகங்களில் இலங்கையில் நிலையான வாழ்வாதாரத்தின் மூலம் விதவைகள் மற்றும் பெண்களை வழிநடத்தும் குடும்பத்தை மேம்படுத்துவதற்கான வேலைத்திட்டத்தை (EHSAS Project) மூன்று வருடங்களால வெற்றிகரமான முறையில் செயற்படுத்தி வருகின்றது.

இலங்கையில் நிலையான வாழ்வாதாரத்தின் மூலம் விதவைகள் மற்றும் பெண்கள் வழிநடத்தும் குடும்பங்களை மேம்படுத்துவதனூடாக பொருளாதார ரீதியாக நலிவுற்ற பெண்கள் தலைமைதாங்கும் குடும்பங்களை வலுப்படுத்துவதே இத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

இத்திட்டத்தினூடாக வாழ்வாதார உதவிகள், நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின்போது அவரச உலர் உணவுப் பொதிகள், அனர்த்த நிவாரனம், மாணவர்களுக்கான கற்றல், சுயதொழில் பயிற்சி மற்றும் வழிகாட்டல்கள் என பல செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

அந்தவகையில், இவ்வேலைத் திட்டத்தின் அரச பங்குதாரர்களுக்கான கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் மீளாய்வு செயலமர்வும், இத்திட்டத்தை வெற்றிகரமாக செயற்படுத்திய பிரதேச செயலாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் கௌரவிப்பும் 2024 ஜனவரி 23 ஆம் திகதி அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக அபேவிக்ரம அவர்களின் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது இத்திட்டம் அமுல்படுத்தப்பட்ட இறக்காமம், சம்மாந்துறை, அட்டாளைச்சேனை, நாவிதன்வெளி, வெல்லாவெளி, களுவாஞ்சிகுடி மற்றும் பதியத்தலாவ ஆகிய 7 பிரதேச செயலக பிரதேச செயலாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்களே கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில், இலங்கை இஸ்லாமிய நிறுவனத்தின் ஆநுயுடு பிரிவின் ஏற்பாட்டில் நிதி ஒருங்கிணைப்பாளர் அஹமட் இர்ஷாத், சிரேஷ்ட திட்ட உத்தியோகத்தர் ஏ.சுபுஹான், சிரேஷ்ட நிதி உத்தியோகத்தர் ஏ.பி.அர்சாத், திட்ட இணைப்பாளர்களான சி. சுகிர்தனி, திரு. சசிகுமார் கனேஷமூர்த்தி, திரு. ரமேஷ், திரு. ஹுதா ஆகியோரும் கலந்து சிறப்பித்ததுடன் வாழ்வாதாரத் திட்டத்தை வெற்றிகரமாக முடிக்க உழைத்த இஸ்லாமிக் ரிலீப் நிறுவன குழுவினரும் மாவட்ட செயலாளரினால் கௌரவிக்கப்பட்டனர்.



# இளைஞர்களுக்கான பாதுகாப்பான புலம் பெயர்வு திருகோணமலையில் விழிப்புணர்வு நிகழ்வு

(ஹஸ்பர் ஏ.எச்)

மனிதவள திணைக்களத்தின் ஏற்பாட்டில் திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலகம் மற்றும் திருகோணமலை நகரசபையின் பொது நூலகத்துடன் இணைந்து இளைஞர்களுக்கான பாதுகாப்பான புலம் பெயர்வு தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு சர்வதேச புலம் பெயர்தலுக்கான அமைப்பின் மூலம் நேற்று (31) திருகோணமலை நகரசபை பொது நூலக மண்டபத்தில் இடம் பெற்றது.

இவ் நிகழ்வு திருகோணமலை நகரசபையின் செயலாளர் வெ. இராஜசேகர் தலைமையில் நடைபெற்றது பட்டணமும் சூழலும் பிரதேச செயலக மனிதவள அபிவிருத்தி உத்தியோகஸ்தர் தெ. புரபானந்தன் நிகழ்வினை மேற் கொண்டிருந்தார்.

நிகழ்வில் திருகோணமலை நகரசபையின் நிர்வாக உத்தியோகத்தர் என்.பரமேஸ்வரன், பிரதம நூல கர் நா.யோகேஸ்வரன் நூலகர் றிம்சானா, நூலக உதவியாளர்களான உ.ரஜனிக்காந்தன், அ.அச்சுதன் உட்பட பலர் கலந்து சிறப்பித்தனர்.



# ரஷ்யா - உக்ரைன் இரண்டு தரப்புக்கும் இடையில் நூற்றுக்கணக்கான போர்க்கைதிகள் பரிமாற்றம்



ரஷ்யாவும், உக்ரைனும் தங்களிடையே நூற்றுக் கணக்கான போர்க் கைதிகளை நேற்று பரிமாறிக் கொண்டன.

சுமார் 65 உக்ரைன் போர்க் கைதிகளுடன் பறந்து கொண்டிருந்த ரஷ்ய ராணுவ விமானம் சுட்டுவீழ்த் தப்பட்டதால் ஒரு வார தாமதத்துக்குப் பிறகு இந்த நல் லெண்ண நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது குறித்து ரஷ்ய பாதுகாப்புத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், ரஷ்யாவிடம் இருந்த 195 உக்ரைன் போர்க் கைதிகள் அவர்களது தாய் நாட் டிடம் ஒப்படைக்கப்பட்டனர். அதற்குப் பதிலாக, அதே எண்ணிக்கையிலான ரஷ்ய போர்க் கைதிகள் எங்க-ளிடம் ஒப்படைக்கப்பட்டனர், என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

உக்ரைன் அதிபர் வோலோதிமீர் ஸெலென்ஸ்கி வெளியிட்டுள்ள அறிக்கையில், '207 உக்ரைன் ராணுவ வீரர்கள் திரும்ப வருகின்றனர். ரஷ்யாவால் சிறைப்பிடிக்கப்பட்ட ஒவ்வொரு வீரரையும் நினைவில் கொள்வோம். அவர்கள் அனைவரையும் மீட்பதற்கான முயற்சியில் இறங்கியுள்ளோம்' என்று குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக, ரஷ்யாவுக்கும், உக்ரைனுக்கும் இடையே மேற்கொள்ளப்பட்டுள்ள கைதிகள் பரிமாற்ற ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள் கடந்த வாரம் தொடங்கப்பட்டது.

அப்போது 65 உக்ரைன் போர்க் கைதிகளை ஏற்றிக் கொண்டு ரஷ்ய ராணுவத்துக்குச் சொந்தமான இல்யுஷின் இல்-76 ரகத்தைச் சேர்ந்த விமானம் எல்லை நகரான பெல்கிராடை நோக்கி வந்துகொண்டிருந்தபோது அதனை உக்ரைன் சுட்டுவீழ்த்தியதாக ரஷ்யா குற்றஞ்சாட்டியது.

இதில், 9 ரஷ்யர்கள் அடங்கலாக போர்க் கைதிகள், விமானிகள் உள்பட அனைவரும் உயிரிழந்ததாகக் கூறப்பட்டது. எனினும், இது தொடர்பாக சர்வதேச விசா ரணை நடத்தப்படவேண்டும் என்று உக்ரைன் கூறியது.

இந்த விவகாரத்தில் கைதிகள் பரிமாற்ற ஒப்பந்தம் ரத்து செய்யப்படலாம் என்று அஞ்சப்பட்டது. எனினும், ஒரே வாரத்தில் இந்த விவகாரம் முடிவுக்கு வந்து கைதி கள் பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

உக்ரைன் போர் தொடங்கியதற்குப் பிறகு ஒரே நாளில் இத்தனை அதிக கைதிகள் பரிமாற்றம் செய்து கொள்ளப்பட்டிருப்பது இதுவே முதல்முறை என்று கூறப் படுகிறது.

நேட்டோவில் உக்ரைன் இணைவதற்கு எதிர்ப்பு தெரிவித்து, அந்த நாட்டின் மீது ரஷ்யா கடந்த 2022 பெப்ரவரி மாதம் படையெடுத்து, உக்ரைனின் கிழக்கு மற்றும் தெற்குப் பகுதியைச் சேர்ந்த 4 மாகாணங்க-ளின் கணிசமான பகுதிகளை கைப்பற்றியது. அந்த மாகாணங்களில் எஞ்சிய பகுதிகளை கைப்பற்ற ரஷ் யாவும், இழந்த பகுதிகளை மீட்க உக்ரைனும் போரிட்டு வருகின்றன.

இதில் இரு தரப்பிலும் ஏராளமான வீரர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.




## உலகப் பொருளாதார மன்றத்தின் ஆண்டுக் கூட்டம் இந்தியாவைப் பாராட்டிய சர்வதேச அமைப்புகள்

உலகப் பொருளாதார மன்றத்தின் ஆண்டுக் கூட்டத்தில், புதிய இந்தியாவை சர்வதேச நிதியம், பல்வேறு நிறுவனங்கள், பில் கேட்ஸ் அறக்கட் டளை உள்ளிட்டவை வெகுவாகப் பாராட்டியுள் ளன.

அண்மையில் சுவிட்சர்லாந்தில் உள்ள டாவோஸ் நகரில் உலகப் பொருளாதார மன்ற ஆண்டுக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் புதிய இந்தியா குறித்த தங்கள் கண்ணோட்டங்களை உலகத் தலைவர்கள் பகிர்ந்துகொண்டனர்.

இதில் பில் - மெலிண்டா கேட்ஸ் அறிக்கட்ட ளையின் இணைத் தலைவர் பில் கேட்ஸ் உரை யாற்றியபோது,

புதுமையான கண்டுபிடிப்புகளில் இந்தியா முன்னேற்றம் அடைந்து வருகிறது. இந்தியாவில் ஏராளமான புதிய சிந்தனைகளை பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளை பரிசோதித்துப் பார்த்து, அவற்றை உலகம் முழுவதும் விரிவு படுத்துகிறது. அமெரிக்கா மற்றும் சீனாவுடன் இணைந்து இந்தியா பணியாற்றுகிறது. அதை ஜி20 நாடுகள் மாநாட்டில் காண முடிந்தது, என்று தெரிவித்துள்ளார்.

உலகப் பொருளாதார மன்ற தலைவர் பார்ஜ் பிரெண்ட் தனது உரையில், நிகழாண்டு இந் திய பொருளாதாரம் 8 சதவீதமாக வளர்ச்சி அடையும் என்று உலகப் பொருளாதார மன்றம் எதிர்பார்க்கிறது. பொருளாதார ரீதியாக இந்தியா வெற்றியடைந்துள்ளது. இந்தியா மிக வேகமாக வளர்ச்சி அடைந்து வருகிறது. எண்ம (டிஜிட்டல்) பொருளாதாரத்தில் மட்டுமின்றி, சேவைகள் ஏற்றுமதியிலும் இந்தியா முன்னிலை வகிக்கிறது, என்று குறிப்பிட்டார்.

சர்வதேச நிதிய துணை நிர்வாக இயக்குநர் கீதா கோபிநாத், பொருளாதார ரீதியாக மிக வேகமாக வளரும் முக்கிய நாடுகளில் ஒன்றாக இந்தியா நீடிக்கிறது. சாலைகள், துறைமுகங்கள், போக்குவரத்து, எண்ம உள்கட்டமைப்பு மேம் பாட்டில் இந்தியா சிறப்பாக செயலாற்றியுள்ளது, என்று தெரிவித்தார்.

## இந்திய அரசின் 'அக்னிபாத்' திட்டம் துரோகம் என்று சாடிய ராகுல் காந்தி



அக்னிபாத் திட்டம் தேசபக்தி யுள்ள இளைஞர்களுக்கு இழைக்கப் பட்டுள்ள துரோகம் மட்டுமல்ல இந் திய ராணுவத்துடன் இணைக்கப் பட்டிருக்கும் நாட்டின் புனிதமான உணர்வுகளுக்கு இழைக்கும் துரோ கம், என்று காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக தனது எக்ஸ் தளத்தில் அவர், ஆயுதப்படை யில் ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட 1.5 லட்சம் இளைஞர்களை தற்காலிக ஆள்சேர்ப்பு அக்னிபாத் திட்டம் என்ற பெயரில் ஆதரவற் றவர்களாக விடப்பட்டுள்ளது அவர்களுக்கு இழைக்கப்படும் மா பெரும் அநீதியாகும். அக்னிபாத் திட்டம் தேசபக்தியுள்ள இளை ஞர்களுக்கு இழைக்கப்பட்டுள்ள துரோகம் மட்டுமல்ல இந்திய ராணுவத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் நாட்டின் புனிதமான உணர்வுகளுக்கு இழைக்கும் துரோகம், எனப் பதிவிட்டுள்ளார்.

முன்னதாக, பிஹார் மாநிலம், கதிகாரில் நேற்று புதன் கிழமை தனது இந்திய ஒற்றுமை நீதி நடைபயணத்தின் போது ராணுவத்தில் சேர ஆர்வமுள்ள இளைஞர்களுடன் கலந்துரை யாடலின் போது, "கடந்த 40-50 ஆண்டுகளில் வேலையின்மை வீதம் அதிகமாக இருந்ததால் நாட்டில் பரவலாக வேலையில்லா திண்டாட்டம் நிலவுகிறது" என்று தெரிவித்திருந்தார். பிஹாரில் இருந்து மேற்குவங்கம் திரும்பிய அவருக்கு மக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். (04)

## மாலைதீவுக்குச் சுற்றுலாவுக்குச் செல்லும் இந்தியர்களின் எண்ணிக்கை குறைந்தது

இந்திய பிரதமர் நரேந்திர மோடியை மாலைதீவு அமைச்சர்கள் மூன்றுபேர் அவமதித்து வலைதளத்தில் செய்த பதிவு, இந்தியா - மாலைதீவிற்கு இடையே பெரும் விரிசலை ஏற்படுத்தியது. பல இந்தியர்கள் தங்களது மாலைதீவு சுற்றுலாப் பயணங்களை ரத்துச் செய்தனர்.

பொய்கொட் மாலைதீவு (Boycott Maldives) என்ற ஹாஷ்டக் மூலம் மாலைதீவை தொடர்ந்து புறக்கணித் தனர். ஈஸ்மைட்ரிப் (EaseMyTrip) போன்ற சுற்றுலா பயண செயலிகள் மாலைதீவை தங்களது வலைத்தளத் திலிருந்து நீக்குவதாகத் தெரிவித்தன.

இந்நிலையில், மாலைதீவிற்கு இந்தியர்களின் வரவு வெகுவாகக் குறைந்திருப்பதாக மாலைதீவு சுற்றுலா அமைச்சகத்தின் தரவுகள் தெரிவிக்கின்றன. கடந்த ஆண்டு மாலைதீவிற்கு அதிகம் சுற்றுலாப்பயணிகளை அனுப்பும் நாடுகளில் முதலிடத்திலிருந்த இந்தியா தற்போது ஐந்தாவது இடத்திற்கு சென்றுள்ளது.

ஆண்டுக்கு குறைந்தபட்சம் 2 லட்சம் இந்தியர்கள் மா-லைதீவிற்கு சுற்றுலா செல்கின்றனர். சுற்றுலாப் பயணங் களுக்கு தொடர்ந்து மாலைதீவை தேர்வு செய்துவந்த இந் தியர்கள் இப்போது மாலைதீவை புறக்கணித்துவருகின் றனர்.

ஜனவரி மாதத்தில் மட்டும் 1.74 லட்சம் சுற்றுலாப்பயணி கள் மாலைதீவிற்குச் சென்றுள்ளனர். அதில் 13,989 பேர் மட்டுமே இந்தியர்கள். ஜனவரியில் அதிக சுற்றுலாப் பயணிகள் ரஷ்யாவிலிருந்து அங்கே சென்றுள்ளனர். இரண்டாம் இடத்தில் இத்தாலி, மூன்றாம் இடத்தில் சீனா மற்றும் நான்காம் இடத்தில் பிரிட்டன் ஆகிய நாடுகள் இடம்பெற்றுள்ளன. (04)

# கல்முனை ஆதார வைத்தியசாலையில் உலக தொழுநோய் தின நிகழ்வு




(வி.ரி.சகாதேவராஜா)

கல்முனை ஆதார வைத்தியசாலையில் உலக தொழுநோய் தினத்தினையொட்டி நேற்று முன்தினம் (30) வைத்தியசாலையின் கேட்போர்கூடத்தில் தொழுநோய் தின நிகழ்வு நடைபெற்றது.

வைத்தியசாலையின் தோல் நோய் பிரிவினரின் ஏற்பாட்டில் வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டொக்டர். இரா. முரளீஸ்வரன் தலைமையில் இந் நிகழ்வு இடம்பெற்றது

இந் நிகழ்வின் பிரதம அதிதியாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் தோல் வைத்திய நிபுணர் என். தமிழ்வண்ணன் கலந்து சிறப்பித்தார்.

வரவேற்புரையினை தோல் நோய் மருத்துவர் ஜே. எச்.மஷாகிட் வழங்கியதோடு விசேட உரையினை வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி இரா. முரளீஸ்வரன் வழங்கியிருந்தார்.

தோல் வைத்திய நிபுணர் என். தமிழ்வண்ணனினால் தொழுநோய் பற்றிய விழிப்புணர்வு விளக்கவுரை நிகழ்த்தப்பட்டது.

அவர் தனதுரையில் தொழுநோயின் வரலாறு, அதன் வகைகள், அறிகுறிகள் முக்கியமாக தொடுகையுணர்வு குறைவான தோலின் நிறமாற்றங்கள், நரம்புத்திரள்கள், ஏனைய தோலின் மாற்றங்கள் இதற்கு சிகிச்சை முறைகள் மருந்துகள் மற்றும் அதன் பக்க விளைவுகள் அதற்கான தீர்வுகள் பற்றி விளக்கமாக விவரித்தார்.

இதனை தொடர்ந்து வைத்தியசாலையின் பணிப்பாளர், வைத்திய நிபுணர்கள், உத்தியோகத்தர்கள் ஊழியர்களினால் டொக்டர் தமிழ்வண்ணனுக்கு மாலை அணிவித்து, பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னமும் வழங்கப்பட்டு கௌரவிப்பு நிகழ்வும் நடைபெற்றது.

நன்றியுரையினை தோல் சிகிச்சை பிரிவு பொறுப்பு தாதிய உத்தியோகத்தர் திருமதி.வி. இராஜலோஜினி நிகழ்த்தினார்.

நிகழ்வில் வைத்தியசாலையின் பொது வைத்திய நிபுணர் எம் என் எம். சுவைப், வெளிநோயாளர் பிரிவு பொறுப்பு வைத்தியர் ஆர்.கணேஷ்வரன், தாதிய பரிபாலகர் திரு. என். சசிதரன், தாதிய பரிபாலகி திருமதி எல். சுஜேந்திரன், பிரதம மருந்தாளர் பி.சுதர்ஜினி, பிரதான சுகாதார முகாமைத்துவ உதவியாளர் திருமதி. ரோஸி சுகுமார், வைத்திய அதிகாரிகள், தாதிய உத்தியோகத்தர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் ஊழியர்களும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

நிகழ்ச்சியினை சுகாதார கல்வி பிரிவு பொறுப்பு தாதிய உத்தியோகத்தர் திருமதி. என்.மனோஜினி தொகுத்து வழங்கியிருந்தார்.

# வீதிகளுக்கு பெயர்ப் பலகையிடும் திட்டம் கல்முனை மாநகர சபையால் முன்னெடுப்பு




(ஏ.எஸ்.மௌலானா)

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட வீதிகளுக்கு பெயர்ப் பலகைகளை நிறுவும் வேலைத்திட்டம் நேற்று புதன் கிழமை பிற்பகல் மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி தலைமையில் பொறியியலாளர் ஏ.ஜே.ஏ.எச்.ஜௌஸி, பிரதி ஆணையாளர் ஏ.எஸ்.எம்.அஸீம் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தனியார் பங்களிப்புடனான நகர அழகுபடுத்தல் திட்டத்தின் ஓர் அங்கமாக முன்னெடுக்கப்படும் இந்த வேலைத் திட்டத்திற்கு அமானா வங்கி அனுசரணை வழங்கியுள்ளது. இதற்கான ஒப்பந்தம் அண்மையில் கைச்சாத்திடப்பட்டிருந்தது.

கல்முனை மாநகர சபையின் கீழுள்ள150 வீதிகளுள் கல்முனை - மட்டக்களப்பு மற்றும் கல்முனை- அக்கரைப்பற்று பிரதான வீதிகளில் இருந்து ஆரம்பிக்கும் 40 வீதிகளுக்கு இத்திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக பெயர்ப் பலகைகள் நிறுவப்பட்டுள்ளன.

கல்முனை மாநகர பிரதேசங்களில் நீண்ட காலங்களுக்கு முன்னர் அமைக்கப்பட்டிருந்த பெரும்பாலான வீதிகளின் பெயர்ப் பலகைகள் சேதமடைந்தும் அழிவடைந்தும் காணப்பட்டதுடன் சில வீதிகளின் பெயர்ப் பலகைகள் இருந்த இடமும் இல்லாமல் போயுள்ளன. இதனால் வெளியிடங்களில் இருந்து வருகை தருகின்ற பயணிகள் மாத்திரமல்லாமல் உள்ளூர் மக்களும் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வந்தனர்.

இக்குறைபாட்டைக் கருத்தில் கொண்ட மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி அவர்கள் இது விடயத்தில் அதிக கரிசனையுடன் மேற்கொண்ட முயற்சியின் பயனாக இவ்வீதிகளுக்கு பெயர்ப் பலகையிடும் வேலைத் திட்டத்திற்கு அமானா வங்கி அனுசரணை வழங்க முன்வந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த ஆரம்ப நிகழ்வில் கல்முனை மாநகர சபை யின் வேலைகள் அத்தியட்சகர் வி.உதயகுமரன், தொழில்நுட்ப உத்தியோகத்தர் எம். அமீர், அமானா வங்கியின் கல்முனை நகரக் கிளை முகாமையாளர் எம்.ரி. நயீமுல்லாஹ், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.எம்.எம்.சிபான் உள்ளிட்டோரும் பங்கேறிருந்தனர்.

# அறபுக் கல்லூரி மௌலவிமார்களுக்கான உளவள வழிகாட்டல் செயலமர்வு



(ஹஸ்பர் ஏ.எச்)

திருகோணமலை மாவட்டத்தின் தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதியில் உள்ள அறபுக் கல்லூரிகள், மத்ரசாக்களில் கடமையாற்றும் மௌலவிகளுக்கான உளவளத் துணை வழிகாட்டல் செயமர்வொன்று இன்று இடம் பெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி அவர்களின் வழிகாட்டுதலுக்கிணங்க பிரதேச செயலக மண்டபத்தில் இடம் பெற்ற குறித்த செயலமர்வில் அன்றாட வாழ்க்கையின் போது ஏற்படும் உளநெருக்கீடுகள் மற்றும் அதனை சமாளித்து எவ்வாறு தங்களது அன்றாட கடமைகளை நிறைவேற்றுவது தொடர்பிலும், மாணவர்களுடன் உரையாடும் போதும் கல்வி கற்றல் நடவடிக்கைகளின் செயற்பாடுகளின் போது செயற்படுவது உள்ளிட்ட பல விடயங்கள் இதன் போது விரிவுரைகளாக வழங்கப்பட்டன.

குறித்த செயமர்வுக்கு வளவாளராக மாவட்ட உள சமூக உத்தியோகத்தர் எம்.எம்.எம்.சம்சீத் கலந்து கொண்டார். இதனை சிறுவர் பாதுகாப்பு மன்றம் ஏற்பாடு செய்திருந்தது.

இதில் சிறுவர் உரிமைகள் பாதுகாப்பு உத்தியோகத்தர் எஸ்.றியால்,முஸ்லிம் கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.பி.எம்.பஸ்மி உட்பட மௌலவிமார்கள் என பலர் கலந்து கொண்டனர்.



# இளங்கவி விபுலசசிக்கு கலைஞர் சுவதம் விருது

அம்பாறை மாவட்ட இலக்கிய விழாவில் காரைதீவைச் சேர்ந்த தாதிய உத்தியோகத்தர் இளம் கவிஞர் மனோகரன் சசிப்பிரியன்(விபுலசசி) அவர்களுக்கு கலைஞர் சுவதம் விருதினை அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக அபேவிக்கிரம வழங்கி வைத்தார்.

(படம் - வி.ரி.சகாதேவராஜா)



# தற்போதுள்ள ஊடகவியலாளர்கள் சிலர் கீழ்த்தனமாகச் செயற்படுகின்றனர்!

## யாழ். அரச அதிபர் குற்றச்சாட்டு

சமூகத்தை எப்போதும் ஒரு கொந்தளிப்பான நிலையில் வைத்திருக்க வேண்டும் என்ற மனப்பான்மையோடு மிகவும் கீழ்த்தனமான நிலையில் தற்போதுள்ள ஊடகவியலாளர்கள் சிலர் செயற்படுகின்றார்கள், என யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் சிவபாலசுந்தரன் தெரிவித்துள்ளார்.

ஊடக அமைச்சின் ஏற்பாட்டில் வடக்கு ஊடகவியலாளர்களுக்கான இரண்டு நாள் பயிற்சிப்பட்டறையின் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

தற்போதுள்ள நெருக்கடி நிலையில் நாட்டினை எவ்வாறு முன்னோக்கிக் கொண்டு செல்லலாம் அல்லது எமது பிரதேசத்தில் உள்ள சவாலான விடயங்கள் – உதாரணமாக டெங்கு மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கையிடலாம். ஆனால், தற்போதைய நிலையில் அவ்வாறான ஒன்றும் நடைபெறவில்லை.

இருக்கிற பிரச்சினையை இன்னும் கொஞ்சம் கிளப்பிவிட்டால் செய்தி கொஞ்சம் பரபரப்பாக போகும் என்ற நிலையில்தான் தற்போது ஊடகவியலாளர்கள் செயற்படுகிறார்கள் அந்த விடயம் மாற்றப்பட வேண்டும். முதுகில் புண் இருந்தால்தான் காடு நுழையப் பயம், என்று கூறு வார்கள். என்னுடைய முதுகில் புண் இல்லை. நான் எதற்குள்ளும் புகுந்து விடுவேன்.

ஆனால், முதுகில் புண்ணை ஏற்படுத்துகின்ற வேலையை தற்பொழுது ஊடகவியலாளர்கள் செய்கின்றார்கள். மறைமுகமாக அச்சுறுத்துகின்றார்கள்.

ஊடகவியலாளர் தான் சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும். அந்தப் பொறுப்பை சரியாக நீங்கள் செய்யவேண்டும். உங்களுடைய நாக்கினாலும் பேனையாலும் சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய சக்தி காணப்படுகின்றது. எனவே, இன்றைய பயிற்சிப் பட்டறையின் மூலம் மாற்றங்கள் ஏற்பட வேண்டும்.

யாழ்ப்பாண மாவட்டம் டெங்கில் முன்னணியில் உள்ளது. கடந்த இரண்டு மூன்று மாதங்களாக டெங்கு சம்பந்தமான விடயத்தினை நாங்கள் ஆராய்ந்து பார்த்தோம். டெங்கு தொடர்பில் ஊடகங்கள் எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள் என்று.

சமூகத்தில் எங்கெங்கே பிரச்சனை காணப்படுகின்றதோ அதனைத் தான் ஊடகங்கள் பார்க்க வேண்டும். ஆனால், யாழ்ப்பாணத்தில் ஊடகங்கள் அதனை பார்க்கவில்லை. தனிப்பட்ட ரீதியாக தாக்குதல்களை மேற்கொள்கின்றார்கள். அது மாற்றப்பட வேண்டும்.

நான் சிறுவனாக இருந்த காலத்தில் பத்திரிகைகள் வாசித்து பலவிதமான விடயங்களை அறிந்து கொண்டேன். எனது தந்தையாரும் அதனை ஊக்கப்படுத்தினார்.

ஆனால், தற்பொழுது எனது பிள்ளைகளுக்கு கூறும் விடயம் – பத்திரிகைகள் வாசிக்காதீர்கள் என்பதாகும். ஏனென்றால் தனிப்பட்ட ரீதியாக தாக்குகின்றார்கள்.

எனவே, ஊடகவியலாளர்கள் இந்த விடயம் தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும். நாட்டினை முன்னோக்கி கொண்டு செல்வதில் ஊடகவியலாளர்களுக்கும் அதிக பங்கு உண்டு. எனவே எதிர்காலத்தில் ஊடகவியலாளர்கள் அவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (O1)

## இலங்கை வணிகப் பேரவைப் பிரதிநிதிகள் தேசிய மக்கள் சக்திக்குமிடையில் சந்திப்பு

(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)

மக்கள் விடுதலை முன்னணியின் தலைமை அலுவலகத்தில் இலங்கை வணிகப் பேரவையின் பிரதிநிதிகள் குழுவினருக்கும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க உள்ளிட்ட தேசிய மக்கள் சக்தியின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று (31) இடம்பெற்றது.

இதன்போது பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிக்கு மத்தியில் இலங்கையின் வணிகத்துறை எதிர்நோக்கியுள்ள சிக்கல்கள் மற்றும் பொருளாதார நெருக்கடியைத் தீர்த்துவைத்தல் சம்பந்தமான தேசிய மக்கள் சக்தியின் கொள்கைரீதியான அணுகுமுறைகள் பற்றி விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இலங்கை வணிகப் பேரவையின் சார்பாக இந்த சந்திப்பில் அதன் தவிசாளர் ஏர்னஸ்ற் அன்ட் யங் நிறுவனத்தின் உள்நாட்டு முகாமைத்துவ பங்காளி துமிந்த ஹுலங்கமுவ, ஸ்டேன்டர்ட் அன்ட் சார்ட்டட் வங்கியின் பிங்குமால் தெவரதன்திரீ, டயலொக் ஆசியாட்டாவின் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் சுபுன் வீரசிங்க, அட்வகாட்டா நிறுவனத்தின் தலைவர் முட்டாசா ஜெபர்ஜி ஆகியோரை உள்ளிட்ட குழுவினர் கலந்துகொண்டதோடு தேசிய மக்கள் சக்தியின் சார்பாக மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா, தேசிய மக்கள் சக்தியின் தேசிய நிறைவேற்றுப் பேரவை உறுப்பினர் கே.டி. லால்காந்த, தேசிய நிறைவேற்றுப் பேரவை உறுப்பினர் விஜித ஹேரத், தேசிய நிறைவேற்றுப் பேரவை உறுப்பினர் பொறியியலாளர் குமார ஜயக்கொடி ஆகிய தோழர்களை உள்ளிட்ட குழுவினரும் பங்கேற்றிருந்தனர்.









# விசேட தேவை கல்விப் பிரிவு மாணவர்களின் கண்காட்சி









(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)

கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையில் விசேட தேவையுடையவர்களுக்கான கல்விப் பிரிவு சிறப்பாக செயற்பட்டு வருகின்றது.

இம் மாணவர்களின் திறமைகளை வெளிக்காட்டும் முகமாக ஏற்பாடு செய்யப்பட்ட மாணவர்களின் கைவினைப் பொருட் கண்காட்சி, கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையின் தம்பி நெய்னா மரைக்கார் கேட்போர் கூடத்தில் விசேட கல்விப் பிரிவு ஆசியர்கள் மற்றும் பெற்றோர்களின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

# பாலையடிப் போட்டா வடிச்சல் வாய்க்கால் பல வருடங்களாக சேதமடைந்த நிலையில்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

சம்மாந்துறை விவசாய விரிவாக்கல் பிரிவிற்குட்பட்ட பாலயடி போட்டா, தொய்யம் வட்டை கீழ்க்கண்டம் மற்றும் மேற்கண்டம் ஆகிய சுமார் 300 ஏக்கருக்கும் அதிகமான வயல்நிலங்களில் இருந்து வெளியேற்றப்படும் வடிச்சல் நீர் கிறவல் ஆற்றில் சேருமிடத்திலுள்ள வாய்க்கால் சேதமடைந்து பல வருடங்களாகியும் இன்னும் திருத்தப்படாத நிலையிலேயே காணப்படுவதாக பிரதேச விவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்த வாய்க்கால் சேதமடைந்துள்ளதால் இதன் மேலான போடப்பட்டிருந்த கொங்கிறீட் பாலமும் இடிந்து விழுந்துள்ளது. இதனால் ஏனைய வயல்களுக்கு செல்லும் விவசாயிகளும் உழவு இயந்திரங்களும் சுற்றி வளைத்தே தமது வயல் நிலங்களுக்கு செல்ல வேண்டியுள்ளது.

அத்துடன் வாய்க்கால் ஆழமாகவுள்ளதால் இருபுறமும் உள்ள வயல் நிலங்கள் ஒவ்வொரு போகத்தின் போதும் இடிந்து விழுவதால் விவசாயிகள் பலவிதமான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக வட்ட விதானைகள் ஊடாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பலமுறை தெரிவித்தும் இதுவரை இவ்வாய்க்கால் திருத்த வேலைகள் இடம்பெறாமல் இருப்பது மிகவும் கவலையளிப்பதாக விவசாயிகள் தெரிவித்தனர்.


JRIDE
BEYOND THE ROAD
Safety and comfort are our concern
ஜேரைட்
JRIDE
TAXI APP FROM JAFFNA
இலங்கை முழுவதும் | Islandwide
DOWNLOAD PASSENGER APP:
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
jride
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
GET IT ON Google Play
Download on the App Store
வாகன உரிமையாளர்களே ஓட்டுனர்களே!
உங்கள் தனிப்பட்ட மற்றும் வாடகை வாகனங்களை பயன்படுத்தி உங்கள் வருமானத்தை அதிகரிக்க ஒரு தீர்வு!
இதுவரை பதிவு செய்யாதவர்கள் JRide Driver செயலியில் இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் சேவையை தொடங்கலாம்!
DOWNLOAD DRIVER APP:
jride
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
YOU CAN EASILY REGISTER & ADD YOUR VEHICLE
GET IT ON Google Play
Download on the App Store
SCHEDULED BOOKING
New Feature
புதிய வசதி
நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?
விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து வாகனம் தேவையா?
எமக்கு அழையுங்கள்; தொலைபேசி ஊடாகவோ; WhatsApp மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.
HOTLINE : 706563213 / 703563213
JRIDE TAXI APP
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!